24th July 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த வரியின் ஒரு பாகத்தை பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கவேண்டும் என்ற உத்தேசம் இப்போது இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கவேண்டுமா என்பதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்.

பொது மராமத்து இலாகாமூலம் கண்மாய், கிணறு வெட்டுதல்

* 585 கேள்வி.—**திரு. சா. கணேசன் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கண்மாய் வெட்டு, கிணறு தோண்டல் போன்ற வேலைகளைப் பொது மராமத்து இலாகாமூலம் செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

திரு. சா. கணேசன் : இப்போது இந்தப் பஞ்சம் பல இடங்களில், மிக பெரும்பான்மையான இடங்களில் இருப்பதால், கண்மாய் வெட்டுவது போன்ற காரியங்களை, அந்தப் பிராந்தியத்திலுள்ள விவசாயிகளுக்கே விட்டுக் கொடுத்து அதைத் தொடர்ந்து வேலை செய்வதன் மூலம், அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயை இந்த விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கண்மாய் வெட்டுவது, செப்பனிடுவது, போன்ற வேலைகளை ஆயக்கட்டுக்காரர்களே செய்வதற்கு முன்வந்தால், அவர்களுக்கு முதலிடம் (ஃபஸ்ட் பிரஃபரன்ஸ்) கொடுப்பது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Pepper.

* 586 *Q.*—SRI J. MATHA GOWDER (on behalf of SRI K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any demand in foreign markets for pepper ;

(*b*) the total production of pepper in this State last year ; and

(*c*) the steps taken for increasing the production of pepper ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Forty tons during 1960–61 which is the latest year for which the required data is available ;

(*c*) Technical advice regarding plant protection measures, proper dosage of fertilisers and use of high yielding pepper vines is given to the pepper growers by the Agriculture Department. Occasionally supply of pepper vine cuttings from Kerala is also arranged on specific indents.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், நீலகிரியில் பர்லியாற்றுக்கருகில் சர்க்கார் தோப்பைச் சேர்ந்தாற்போல் அதிகமாக மிளகு விளையக்கூடிய இடங்கள் இருக்கின்றன. அதிலும் சர்க்கார் துறையிலேயே மிளகு பயிரிடுவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நீலகிரியில் மிளகு பயிரிடுவதற்கு இப்போது 160 எக்கர் எடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதிலிருந்து 20 லட்சம் டன் உற்பத்தி செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[24th July 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக எந்த எந்த மாவட்டங்களில் மிளகு பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வை. சங்கரன் : எந்தெந்த இடத்தில் எவ்வளவு பரப்பில் இந்த மிளகு பயிரிடப்படுகிறது.

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Settlement of provident fund accounts.

* 587 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of applications of retired Non-Gazetted Officer's for disbursement of their Provident Fund Accumulations are pending for more than 6 months ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : One hundred and seventeen.

திரு. வை. சங்கரன் : இந்த பிராவிடன்ட் ஃபண்ட் கிடைப்பதில் மிக காலதாமதமாவதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சிலர் பிராவிடன்ட் பண்ட் தொகையையே மூலதனமாக வைத்து ஓய்வு காலத்திற்குப் பின் தங்கள் வாழ்க்கைக்கு வழி செய்து கொள்ளுகிறார்கள். சிலர் தங்களுடைய பெண்களின் கல்யாணத்திற்கு மொத்தமாக உதவும் என்று நினைத்து காத்திருக்கிறார்கள். இம்மாதிரி இருப்பதால் இது சீக்கிரமாகக் கிடைக்கவில்லை என்றால் அவர்களுக்கு மனத் தளர்வு ஏற்பட்டு அதன் காரணமாக பல பாதகங்களும் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே ஓய்வுபெற்ற ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே இந்தத் தொகை கிடைப்பதற்குரிய வழிகளைச் செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The main reason for the delay in disbursement of the Provident Fund accumulations to retired government servants is that they do not send the applications for final withdrawals in the prescribed form with full particulars regarding the temporary advances, part final withdrawals and withdrawals for payment of insurance premia, if any, drawn by them during the 12 months immediately before their retirement from services. This results in prolonged correspondence between the Accountant-General and the Head of the Department and consequent delay in disbursing provident-fund accumulations.

Roads.

* 588 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state when the metalling of the road from Elayangudi in Paramakudi taluk to Rajasingamangalam in Thiruvadanai taluk in Ramanathapuram district will be taken up for execution ?

THE HON. SRI V. RAMAIAH : The proposal is under consideration.

* 589 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to form a road between Anandur in Sivaganga taluk and Kavanoor in Ramanathapuram taluk via Visavanoor, Alvidangam, Vandal, Sethanoor, Anyankottai, Manakudi, Koddikumbam and then Perungaloor to Kavanoor ?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.